1990 ஏப்ரல் 5]

சிரமம் இருக்கிறது. அதற்காக சில இடங்களில் கூட நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்த வேலைகள் முடியப் பெற்று இருக்கிறது. அதை இந்த நிதியாண்டில் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டில் 100 மாணவ-மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறது. எங்கெங்கெல்லாம் அவசியமான தேவைகள் இருக்கின்றனவோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே அரசு விடுதிகளைக் கட்டிக் கொடுக்க முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலே 100 மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாணவர் விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று திட்ட மதிப்பீடு சொல்கிறது. அவ்வளவு பெரும் தொகையில் கட்டப்படக் கூடிய அந்தக் கட்டிடங்கள் சில இடங்களில் பயனற்றுக் கூட இருப்பதை நான் பார்த்து இருக்கிறேன். எனவே, அந்தக் கட்டிடங்கள் 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுமேயானால் 100 விடுதிகள் என்பது 300 விடுதிகள் கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு ஒரு விடுதிக்கு 17 இலட்சம் ரூபாய் வேண்டும் என்பதைக் குறைத்து அந்த மாணவர்களினுடைய தேவைக்கு ஏற்ற முறையில் விடுதிகளைக் கட்ட அரசு முன்வந்து, கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவ, மாணவியர்களின் விடுதிகளின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 50 விகிதாச்சாரத்தில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

* 4669 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை, 2-வது வார்டு நண்டுவெட்டி தெரு ஆதி

திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வீட்டு மனைப் பட்டா வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவுற்று நிலத்தைக் கையகப்படுத்தி வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிய பின்பு, இலவச வீடு கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9—50 மணி

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு அந்த மனை நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு பல்லாண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பணம் சம்பந்தப்பட்ட நிலச் சுவான்தாருக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, அதை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா ? அதே நேரத்திலே, அந்தப் பட்டா வழங்கப்பட்டு விட்டதா, வழங்கப் படவில்லையா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு நிலத்தை அரசு கையகப்படுத்த வேண்டுமென்றால் கிட்டத்தட்ட மூன்றாண்டுக் காலம் ஆகிறது. Continuous process என்று சொல்லப்படுகின்ற அளவில் 4(1) notification 5—A enquiry பிரிவு 6-ன் கீழான Draft Declaration notification மற்றும் பிரிவு 7-ன் கீழான Draft Direction notification ஆகிய நடவடிக்கைகள் முடிவுற்ற பின்பு தான் அரசு அந்த நிலத்தைக் கையகப்படுத்த முடியும். கையகப்படுத்தப்பட்ட பின்னர், நிலத்திற்கு உரிமையாளரிடம் பணம் கட்ட வேண்டுமென்ற ஒரு குறிப்பீடு அரசினுடைய விதியிலிருக்கிறது. அப்படிக் கொடுத்த பின்னர்தான் அரசு அந்த நிலத்தை எடுத்து மக்களுக்கு இலவசப் பட்டாக்கள் வழங்கி விநியோகம் செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அந்தக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1990 ஏப்ரல் 5]*

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிலம் ஆர்ஜிதம் செய்கின்றபொழுது, மூன்றாண்டுகளுக்கு முன்னால்தான் ஆர்ஜிதம் செய்தோம். ஆனால் அப்பொழுது இருந்த நிலத்தினுடைய ரேட் வேறு ; இன்று இருக்கின்ற ரேட் வேறு. ஆகவே, பக்கத்தில் உள்ளவர்கள் அதிகமான ரேட் தருகிறேன் என்று நிலச்சுவான்தாரரைக் கேட்கிறார்கள். இப்படி ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவேதான், விரைவுகாட்டி அந்த மனை நிலத்திற்கு உரிய நபரிடம் தொகையை வழங்கிவிட்டு பிறகு நடவடிக்கையை அரசு எடுத்தால் பரவாயில்லை.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூடிய விரைவில் அந்த நில உரிமையாளருக்கு தொகை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுத்தல்

*6051. டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சாக்கடைகள் அனைத்தும் குடிநீர் பெறப்படும் ஆற்றில் கலப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) பரமக்குடியில் வைகை ஆற்றின் படுகையில் ஆங்காங்கே சில இடங்களில் கழிவுநீர் வழிந்தோடி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) பரமக்குடியிலிருந்து சுமார் 1 கி. மீ. தூரத்திலுள்ள 'தண்டர் தேவிபட்டணம்' என்னும் கிராமத்தின் அருகில் அமைந்துள்ள கழிவுநீர்ப் பண்ணைக்கு கழிவு நீரானது மின் இயந்திரங்கள் மூலம் கழிவு நீரேற்றம் செய்யப்படுகிறது. வைகை ஆற்றில் விடப்படும் கழிவுநீர்த் தேக்கம் இருக்க வாய்ப்பில்லை. வைகை ஆற்றில் நீர் திறந்து விடப்படும்போது, தேங்கியுள்ள கழிவுநீரும் நீர்ப் போக்கில் கொண்டு செல்லப்படும்.